TAMIL NADU LEGISLATURE
30 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றம்

செவ்வாய்க் கிழமை, 1972 நவம்பர் 14

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பா. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

P.T. Teachers

* 291 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to appoint the unemployed P.T. teachers in Middle Schools and High Schools; and

(*b*) if not, whether the Government will consider this scheme?

உடற் பயிற்சி ஆசிரியர்கள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலை வாய்ப்பின்றி இருக்கும் உடற் பயிற்சி ஆசிரியர்களை நடுத்தரப் பள்ளிகளிலும், உயர்தரப் பள்ளிகளிலும் நியமனம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையென்றால், இத்திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளிக்கும் இம் மாதிரியான உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் இருக்கவேண்டிய எண்ணிக்கை பற்றி, இத்தனை மாணவர்களுக்கு இத்தனை ஆசிரியர்கள் என்று அரசாங்கம்

ஏதேனும் விதி உண்டு பண்ணியிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் அந்த விதி மாற்றப்பட்டிருக்கிறதா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர் நிலைப் பள்ளிகளில் 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் நியமிக்கலாம் என்ற ஆணை 13—12—1968-ல் வெளியிடப்பட்டது. அதே ஆணை தான் இப்போதும் நடைமுறையில் இருக்கிறது. 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் இருக்கலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இது முன்னால் இருந்த நிலையோ என்று நான் ஐயப்படுகிறேன். ஏனென்றால், இப்போது 250 என்ற கணக்கில் நியமிக்கப்பட்ட, சில உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் புதிய 1:300 என்ற விகிதத்தில் மாணவர்கள் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, 10, 12 ஆண்டுகளுக்குச் சேவை செய்த உடற்பயிற்சி ஆசிரியர்கள் கூட வெளியே அனுப்பப்படுகிறார்கள். 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியரை நியமிப்பதை அரசாங்கம் கட்டாயம் அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன். மாணவர்களுடைய எண்ணிக்கை சிறிதளவு குறைந்திருப்பினும், அவர்களை வெளியே அனுப்பாதபடி, பாதுகாக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிந்திட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புக்களில், 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியை நியமிக்கலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் ஆணையிட்டிருக்கிறார்; அவரால் 13—12—1962-ல் அன்று அந்த ஆணையில் வெளியிடப்பட்டதாகத் தகவல் கூறப்படுகிறது. 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் இருக்கலாம். அந்தக் கணக்குப்படி தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த வகையில், ஆசிரியர்களாக ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர்கள் வெளியே அனுப்பப்படாமல் பாதுகாக்கப் படுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அரசாங்கம் பரிசீலிக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் படுமானால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்த உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் மாநில அளவில் வேலை வாய்ப்பு இல்லாமல் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று அரசுக்குக் கணக்குத் தெரியுமா? மேலும், இடைநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புவரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு இந்த உடற்பயிற்சியை தருவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 நவம்பர் 14]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் வேலையில் இல்லாமல் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது அரசாங்கத் திடம் இல்லை. மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகங்களிடம் அந்தப் புள்ளி விவரங்கள் கேட்கப் பட்டிருக்கின்றன. அந்தப் புள்ளி விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன், இந்த அவையின் முன் வைக்கலாம். 6 முதல் 8 வகுப்பு வரை எந்த அளவிலே இருக்கிறது என்பதைப்பற்றி இப்போது விவரக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரம் அறிந்து கூறப்படும்.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவர் அவர்களே, இந்த நடுத்தரப் பள்ளி களில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களை நியமிப்பதற்கு என்ன விகிதாச்சாரம் மாணவர்கள் வேண்டும், அதற்கு என்னென்ன காரணங்கள் வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் 6-வது வகுப்பிலிருந்தே உடற் பயிற்சிக்குத் தக்க வழி செய்ய வேண்டுமென்கிற எண்ணம்தான் அரசுக்கு இருந்துவருகிறது. அதனுடைய முழு விவரம் அறிந்து, 6-ம் வகுப்பிலிருந்தே மாணவர்களுக்கு உடற்பயிற்சிக் கல்வியைத் தீவிரமாகச் அளிப்பதற்கு என் னென்ன வழிமுறைகளை மேற்கொள்ளலாமோ அவைகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் செய்யலாம். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் என்ற விதி இருந்து வருகிறது. துவக்கப் பள்ளிகளைப் பொறுத்து என்ன விதி இருக்கிறது என்று தனிக் கேள்வி போட்டால் விவரம் அறியலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, 400 மாணவர்களுக்கு மேல் உள்ள நடுநிலைப் பள்ளிகளில், சில பள்ளிகளில் மட்டுமே உடற்பயிற்சி ஆசிரியர் கள் போட்டிருக்கிறார்கள். எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களைப் போடுவதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நடு நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் என்ன விகிதாச்சாரம் கடைப்பிடிக்கப் படுகிறது என்று இப்போது என்னிடம் தகவல் இல்லை. ஆனால் சில இடங் களில் உடற்பயிற்சிக்குப் போதுமான இடவசதி இல்லாததால், ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து, தேவைப்படுகிற, அவசியப்படுகிற இடங்களில் ஆசிரியர்களை நிய மிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.